யாழ்.

இலக்கிய வட்டம்

# இலங்கை இலக்கியப் பேரவை

2010-2011 ஆம் ஆண்டுகளின்
சிறந்த இலக்கிய நூல்களுக்கான

# பரிசளிப்பு விழா

04.11.2012

யாழ். இலக்கிய வட்டம்

# இலங்கை இலக்கியப் பேரவை

## 2010-2011 ஆம் ஆண்டுகளின்
## சிறந்த இலக்கிய நூல்களுக்கான

# பரிசளிப்பு விழா

**காலம் : 04.11.2012 ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00 மணி**

**இடம் : நாவலர் கலாசார மண்டபம்** (நாவலர் வீதி, யாழ்ப்பாணம்)

**விழாத் தலைவர்: திரு. எஸ். எஸ். குகநாதன்**
(ஆஸ்க் மீடியா முகாமைத்துவப் பணிப்பாளர்)

**தமிழ் வாழ்த்து:** **திருமதி சந்திரமலர் அச்சுதன்**
(ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை - பலாலி)

**வரவேற்புரை:** **சி. சிவதாசன்**
(செயலாளர், இலங்கை இலக்கியப் பேரவை)

**தலைமையுரை.**

**ஆசியுரை:** **பேராசிரியர் மா. வேதநாதன்**
(தலைவர், இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

**அருட்சகோதரி ம. சயந்தி**
(ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை - கோப்பாய்)

**வாழ்த்துரை:** **பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா**
(வாழ்நாள் பேராசிரியர், யாழ். பல்கலைக்கழகம்)

**சிறப்புரை:** **திருமதி கணேஸ்வரி தனமூர்த்தி**
(ஆசிரியை, யாழ், இந்து மகளிர் கல்லூரி)

**பரிசளிப்பு தொடக்க உரை:**

**கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியான்)**
(தலைவர், யாழ். இலக்கிய வட்டம்,
இலங்கை இலக்கியப் பேரவை)

**விருதுரை:** **பேராசிரியர் நா. சண்முகலிங்கன்**
(முன்னாள் துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)

**விதந்துரை:** **நெடுந்தீவு எஸ். மகேஸ்**
(ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்)

**யாழ். இலக்கிய வட்டமும், இலங்கை இலக்கியப் பேரவையும்**

## செயற் குழு உறுப்பினர்கள்

**தலைவர் :** **கலாநிதி க.குணராசா** (செங்கை ஆழியான்)

**செயலாளர்கள் :** **சி.சிவதாசன்**
(இலங்கை இலக்கியப் பேரவை)

**நயினை கி.கிருபானந்தா**
(யாழ். இலக்கிய வட்டம்)

**பொருளாளர் :** **திருமதி யோகேஸ்வரி-சிவப்பிரகாசம்**

**நிர்வாக உறுப்பினர்கள் :** ச. தாட்சாயணி
ஐ. வரதராசா
த. பரமலிங்கம்
செ. யோசப்பாலா
த. ஜெயசீலன்
பொ. சண்முகநாதன்

**யாழ். இலக்கிய வட்டம் வழங்கிவரும்**

## வருடாந்த விருதுகள்

1. நாவேந்தேன் விருது (சிறந்த கவிதைத் தொகுப்பு நூல்)
2. கனக செந்தி கதாவிருது (பத்திரிகைகள் சஞ்சிகைகளில் வெளிவரும் சிறுகதைகள்)
3. செல்லையா விருது (சிறந்த பல்துறை சார் நூல்)
4. மூதறிஞர், கவிஞர் வே. ஐயாத்துரை விருது (சிறந்த கவிதை நூல்)


யாழ். இலக்கிய வட்ட வெளியீடுகள் இதுவரை ஐம்பத்திரண்டு நூல்களை வெளியிட்டுள்ளது.

எமது யாழ். இலக்கிய வட்டத்தில் இணைந்து செயற்பட்டு மறைந்த ஆக்க இலக்கியப் படைப்பாளிகளை என்றும் நினைவு கூறுகிறோம்.

யாழ். இலக்கிய வட்டம், இலங்கை இலக்கியப் பேரவைத் தலைவர்

## 'சாகித்ய ரத்னா'

## கலாநிதி க. குணராசா (செங்கை ஆழியான்) அவர்களின் செய்தி



1984 ஆம் ஆண்டு யாழ். இலக்கிய வட்டம் தனது இலக்கியப் பணியை பரவலாக்கும் நோக்குடன் இலங்கை இலக்கியப் பேரவையை ஆரம்பித்து, இதுவரை நூற்றிற்கு மேற்பட்ட எழுத்தாளர்களின் படைப்புக்கள் கௌரவிக்கப் பட்டுள்ளன. இலங்கையில் ஒவ்வொரு ஆண்டும் வெளிவந்த சிறந்த நூல்களுக்கான விருதினை இலக்கிய சங்கங்கள் வழங்கி வருகின்றன. அவ்வகையில் இலங்கை இலக்கியப் பேரவை பதினொரு துறை சார்ந்த நூல்களுக்கு வருடாவருடம் விருதும் பரிசில்களும் அளித்து கௌரவித்து வருகின்றது. இப் பேரவையின் பரிசளிப்பு விழாவினை இன்றுவரை தனிமனிதனாக மிகச் சிறப்பாக நடாத்திவருகின்றேன். ஆரம்பத்தில் ஒவ்வொரு துறைசார்ந்த நூல்களுக்கும் ஒவ்வொருவர் நிதி உதவி செய்துவிழாவினை சிறப்பாக நடாத்தினார்கள். பின்னர் ஒவ்வொரு நிறுவனத்திடம் நிதிபெற்று விழாவினை நடாத்தி வருகின்றோம். அமரர்களான காரை சுந்தரம்பிள்ளை, ஆ. இராஜகோபால் (செம்பியன்செல்வன்) புத்தொளி சிவபாதம் போன்றோர் தலைவராகிய என்னுடன் இணைந்து ஒழுங்காகவும் சிறப்பாகவும் நடாத்தினார்கள். கடந்த மூன்று ஆண்டுகளாக சி.சிவதாசன் இப்பேரவையின் செயலாளராக இருந்து கடமையாற்றுகிறார். இந்த ஆண்டு பரிசளிப்புக்கான நிதியை டான் தொலைக்காட்சி நிறுவன உரிமையாளரும் ஆஸ்க் மீட்டியா முகாமைத்துவ பணிப்பாளருமான திரு. S. S. குகநாதன் வழங்கியுள்ளார். இம்முறை இப்பரிசளிப்பு விழா சிறப்புற நடைபெற குகநாதன் ஒத்துழைத்தமைக்கு நன்றி இம்முறை பரிசளிப்பு விழாவில் பழம்பெரும் ஊடகவியளாளர் சின்னக்கண்ணு பெருமாள் கௌரவிக்கப்படுகின்றார். யாழ்ப்பாணத்தின் சிறந்த செய்தி ஆசிரியராக கடமையாற்றிய பெருமை இவருக்குரியது. திரு. S. குகநாதனுடைய சகோதரர்கள் யாழ். இலக்கிய வட்டத்தில் இன்னொரு இலக்கியச் செயற்பாடாக நாவேந்தன் விருதினை சிறுகதைகளுக்காக வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இலங்கை இலக்கியப் பேரவையின் 2010, 2011ஆண்டுகளுக்கான பரிசு பெறும் நூலாசிரியர்களையும் விருது சான்றிதழ் பெறுவோரையும் பாராட்டி மகிழ்கின்றேன்.

# விழாத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



**யா**ழ். இலக்கிய வட்டத்தின் இலங்கை இலக்கியப் பேரவை கடந்த இரண்டு ஆண்டுகளில் வெளிவந்த சிறந்த நூல்களுக்கான பரிசளிப்பு விழாவை நடாத்தவிருப்பதையறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ் இலக்கிய உலகிற்கு குறிப்பாக ஈழத்து இலக்கிய உலகிற்கு யாழ். இலக்கிய வட்டம் வழங்கிய பணிகள் அளவிடமுடியாதவை. பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் தொடர்ச்சியாக சிறந்த நூல்களுக்கான பரிசினை வழங்கிவருவது பாராட்டுக்குரியது. அவர்கள் பணி தொடரவும், இவ்வருடத்திற்கான பரிசளிப்பு விழா சிறப்புற நடைபெறவும் வாழ்த்துகின்றேன்.

இவ்வண்ணம்
**எஸ்.எஸ்.குகநாதன்.**
தலைவர், டான் ரி.வி. குழுமம்.

யாழ். பல்கலைக் கழக வாழ்நாள் பேராசிரியர்

# பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா அவர்களின் வாழ்த்துரை



**யா**ழ். இலக்கியப் பேரவை பத்தாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு காலத்தில் கல்வி, கலை, இலக்கியம் என்பவற்றிலே அதிக ஈடுபாடு கொண்டு இயங்கிய நிறுவனங்கள் யாழ்ப்பாணத்திலே இருந்தன. காலச்சூழல் காரணமாக அவை மெல்ல மெல்ல மறையலாயின. எனினும் யாழ்ப்பாணத்தில் இலக்கியம் வளர்ந்துகொண்டே இருந்தது. எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஆசிரியர்கள், புலமையாளர்கள் எனப் பலரும் தத்தம் வசதிகளுக்கும் வாய்ப்புக்களுக்கும் ஏற்பச் செயற்பட்டுக் கொண்டிருந்தனர். இத்தகைய சூழலிலேதான் 1965ஆம் ஆண்டு கனகசெந்திநாதன் முதலிய ஆற்றல்மிகு எழுத்தாளர்களால் யாழ். இலக்கிய வட்டம் ஆரம்பிக்கப்பட்டுத் திறம்பட இயங்கிக் கொண்டிருந்தது. அணிசேராக் கொள்கையுடன் இயங்கிய யாழ். இலக்கிய வட்டத்தின் பன்முகப் பணிகளில் ஒன்றாகக் கருதப்பட்ட பரிசில் வழங்கும் பணிக்கு உயிர்ப்பூட்டும் வகையிலே 1984ஆம் ஆண்டு இலங்கை இலக்கியப் பேரவை கலாநிதி க. குணராசா, மற்றும் இலக்கிய ஆர்வலர்களால் உருவாக்கப்பட்டது.

1984 தொடக்கம் இன்றுவரை இலங்கையிலே தோன்றிய பத்து வகையான நூல்களுக்குப் பரிசளித்து ஊக்குவித்த இப்பேரவை இந்த வருடத்தில் இருந்து அறிவியல் என்னும் ஒரு துறையையும் புதிதாகச் சேர்த்துள்ளது.

கடினமான, கஷ்டமான சூழ்நிலையிலும் இலக்கியப் பேரவை தொடர்ச்சியாக இலக்கியப் பயணத்தை வெற்றிகரமாகச் செய்து கொண்டிருக்கின்றது. அதன்பணிகள் தொடர வாழ்த்துவோமாக.

- நன்றி -

பேராசிரியர்

**– எஸ். சிவலிங்கராஜா**

# இலங்கை இலக்கியப் பேரவைச் செயலாளரின் அறிக்கை



ஆக்க இலக்கியங்கள் எமது இலங்கை மண்ணில் அதீத வளர்ச்சி அடைந்து மிக உன்னத நிலையை எட்டிய காலத்தில் 1965ஆம் ஆண்டு யாழ். இலக்கிய வட்டம் உருவாக்கப்பட்டது. அன்றிலிருந்து பல இலக்கியச் செயற்பாடுகளை முன்னெடுத்து இலக்கியப் படைப்பாளிகளுக்கு ஊக்கமளித்தும், கௌரவம் அளித்தும், மறைந்த எழுத்தாளர்களுக்கு விழாவெடுத்தும், இளம் தலைமுறை எழுத்தாளர்களின் படைப்பிலக்கியங்களை வெளியிட்டும் தன்னாலான பங்களிப்பினைச் செய்து வருகிறது.

மேலும் யாழ். இலக்கிய வட்டமானது தனது இலக்கிய முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும் நோக்குடனும், நாடளாவிய ரீதியில் பரவலடையச் செய்யவும் இலங்கை இலக்கியப் பேரவை என்ற அமைப்பினை 1984ஆம் ஆண்டு ஆரம்பித்த இந்த அமைப்பானது ஆண்டுதோறும் இலக்கியப் படைப்பாளிகளால் படைக்கப்படும் இலக்கிய நூல்களுக்கு விருது வழங்கி அவ்விலக்கியப் படைப்பாளிகளைக் கௌரவித்தும் வருகின்றது. அதற்கமைய காவியம், கவிதை, நாவல், சிறுகதை, சிறுவர் இலக்கியம், நாடகம், சமயம், பல்துறை, ஆய்வு, மொழிபெயர்ப்பு ஆகிய துறைசார் நூல்களுக்கு விருது வழங்கி வருகின்றது.

2010ஆம் ஆண்டினிலிருந்து அறிவியல்சார் நூல்களுக்கும் விருது வழங்கி வருகின்றது. இலக்கியத் துறையில் இன்னுமொரு துறையாகக் கொண்டு சிறந்த நூல் அட்டைப் படங்களை வரையும் கலைஞருக்கும் விருது வழங்கவேண்டும் என்பது எனது ஆதங்கம். அதற்கு எமது இலக்கியப் பேரவைக்கு நிதிவளம் போதாது. இலக்கிய ஆர்வலர்கள், தனியார் நிறுவனங்கள், கூட்டுறவுத் துறைசார் சங்கங்கள் எமக்கு அளித்துவரும் ஆதரவின் நிமித்தமே இப்பணியை நாம் மேற்கொள்ள முடிகிறது. அவர்களின் பரோபகார சிந்தையை நாம் பாராட்டுவதோடு இவ்விருது வழங்கலை நாம் சிரமமின்றிச் செய்துவர பெரும் நிதியம் ஒன்றை உருவாக்கித்தர அவர்கள் முன்வரவேண்டும் என வேண்டுகிறேன்.

மேலும் இலங்கை இலக்கியப் பேரவையின் இப்பெரும் பணியை முன்னெடுத்துச் செல்ல இளைய தலைமுறை ஆக்க இலக்கியப் படைப்பாளிகள் முன்வரவேண்டும். அதனை நாம் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். இந்த வருடம் எமது பேரவையானது இலங்கை ஊடகத்துறையில் மிக நீண்ட காலமாக பணியாற்றி ஊடகத்துறையில் இலைமறை காயாக இருந்து வரும் மதிப்புக்குரிய சின்னக்கண்ணு பெருமாள் அவர்களைக் கௌரவிப்பதில் பெருமகிழ்வு கொள்கின்றது.

நன்றி.

**– சி. சிவதாசன்**

# யாழ். இலக்கிய வட்டச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி



பணக்காரர் ஒருவர் தன் வசதிக்கேற்ப உயர்ந்த ரக நாய் ஒன்றை வளர்த்தார். நாய்க்கு உடல் நலக் குறைவு அதைப் பராமரிக்கும் பணியாளர்கள் நாயை மருத்துவரிடம் காண்பித்து அதற்கான மருந்தையும் வாங்கி வந்தனர். மருந்து திரவ வடிவில் இருந்தது. வேலையாட்கள் துணையோடு ஒருவாறாகப் பிடித்து அதன் வாயருக்கே மருந்தை எடுத்துச் சென்றபோது திமிறி மருந்தினைத் தட்டிவிட்டது, மருந்து தரையில் சிதறியது. கீழே சிதறிய மருந்தினை மிகுந்த ஆர்வத்துடன் நக்கிச் சாப்பிட ஆரம்பித்தது அந்த நாய். எவ்வளவு எளிமையான வழி. நாய் மருந்தை வெறுக்கவில்லை, அதனைக் கொடுத்த முறையை, வலிந்து திணித்த முறையை மட்டுமே விரும்பவில்லை. இக்கால கல்வி முறையும் இப்படித்தான் கல்வி அறிவை வளர்க்கும் கருவி அதனைக் கல்வியாளர்கள் உரிமுறையில் இன்றைய இளைய தலைமுறைக்கு வழங்கினால் அவர்கள் சாதனை படைப்பார்கள். யாழ் இலக்கிய வட்டத்தினர் தங்களுடைய இலக்கிய முயற்சிகள் மூலம் பலபணிகளைச் செய்து வருகின்றனர். அப்பணிகள் சிறக்க வாழ்த்தி அமைகின்றேன்.

**–நயினை கி. கிருபானந்தா**

# எங்கள் பொருளாளர்...



வடமொழிச் சிறப்புப் பட்டதாரியான திருமதி யோகேஸ்வரி-சிவப்பிரகாசம் அவர்கள் சிறுகதைகள் எழுதுவதில் வல்லவர். இலங்கை தமிழ்ப் பெண்ணெழுத்தாளர்களில் மூத்த பெண்ணெழுத்தாளரான இவர் மக்கள் வங்கி முகாமையாளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். உணர்வின் நிழல்கள், ஈன்ற பொழுதில், கணநேர நினைவலைகள், மனம் விந்தையானது ஆகிய நான்கு சிறுகதைத் தொகுதிகளை இவர் வெளியிட்டுள்ளார். மேலும் பல ஆன்மீகக் கட்டுரைகள், பெண்களுக்கான பத்தி எழுத்துக்களை பத்திரிகைகள் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். அண்மையில் யாழ்ப்பாணம் இருபாலை மண்ணில் முற்காலத்தில் வாழ்ந்த புலவர் பற்றிய ஆய்வு நூலொன்றையும் வெளியிட்டுள்ளார். சிரித்திரன் சுந்தர் விருது, கனக செந்திநாதன் கதாவிருது ஆகிய சிறப்பு விருதுகளைப் பெற்றுள்ள இவருக்கு 2011 ஆம் ஆண்டில் சிறந்த சமய நூலுக்கான இலங்கை இலக்கியப் பேரவையின் விருதும் கிடைத்துள்ளது.


**– அரி ஊரான்**

# 2010ஆம் ஆண்டு பரிசுபெறும் நூலும் நூலாசிரியர்கள் அறிமுகமும்

நாவல் :

## குடை நிழல்

தெளிவத்தை ஜோசப்




காதல் கதைகள்தான் நாவல் இலக்கியம் என்பதல்ல. மண்ணின் வரலாறுகளையும் இலக்கிய வடிவமாக்க முடியும் என்ற நிலைக்களத்தில் இந் நாவல் படைக்கப்பட்டிருக்கிறது. அரச சாகித்ய விருது, யாழ்.சம்பந்தன் விருது ஆகிய விருதுகளைப் பெற்றிருக்கும் ஆற்றல் மிகு ஆக்க இலக்கியப் படைப்பாளியான இவரின் நூலுக்கு எமது இலக்கியப் பேரவையின் 2010ஆம் ஆண்டுக்கான பரிசு கிடைக்கின்றது.

ஆய்வு :

## நெடுந்தீவு சிதையும் சின்னங்கள்

நெடுந்தீவு லக்ஸ்மன்



தான் பிறந்து வளர்ந்த மண்ணை நேசிக்கும் இந்நாவலாசிரியர் சிறந்த கவிதைகளை ஆக்கும் திறன் கொண்டவர். இவர் தான் பிறந்த மண்ணையே ஆய்வுக்களமாக்கி இந்நூலைப் பிரசவித்துள்ளார். நெடுந்தீவின் வரலாறும் வளங்களும் கூறும் இந்நூலுக்கு எங்கள் இலக்கியப் பேரவையின் 2010ஆம் ஆண்டுக்கான பரிசு வழங்கப்படுகிறது.

சிறுகதை :

## முட்டைக் கோப்பி

திக்குவல்லை கமால்




மானுடத்தை மறுதலிக்காத எந்தக் கருத்தியலும் என் படைப்புகளுக்கு வளமூட்டுவதை நான் வரவேற்காமலில்லை, என் விரல்களே இலக்கியத்தைப் படைப்பதற்குப் போதுமானவை எனக் கூறும் இவ்வெழுத்தாளர் ஆக்க இலக்கியத்தில் தொடாத துறைகளே இல்லை. ஆண்டுதோறும் ஏதாவது இலக்கியப் படைப்புகளை வெளியிட்டுவரும் இவரின் இந்நூலுக்கு இலக்கியப் பேரவையின் 2010ஆம் ஆண்டுக்கான பரிசு கிடைத்துள்ளது.

சிறுவர் இலக்கியம்

## இனிக்கும் பாடல்கள் படைத்த இருபது கவிஞர்கள்

கவிஞர் த. துரைசிங்கம்





பிஞ்சு உள்ளங்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் கவிபாடி மறைந்த இருபது கவிஞர்கள்பற்றி குழந்தைத் தமிழில் இனிக்க இந்நூலை இப்படைப்பாளி வெளிப்படுத்தி இருக்கிறார். சிறந்த ஈழத்துக் கவிஞர்களில் ஒருவரான இவர் எழுதிய இந்நூலுக்கு 2010 ஆம் ஆண்டுக்கான இலங்கை இலக்கியப் பேரவையின் சிறுவர் இலக்கியத்துக்கான இப்பரிசு கிடைத்திருப்பது தகுதி நிறைந்ததே.

மொழிபெயர்ப்பு :

## கசந்த கோப்பி (Bitter Berry)

இரா. சடகோபன்





ஆங்கில மொழியில் கிறிஸ்ரின் வில்சன் என்பவர் எழுதிய "Bitter Berry" என்ற நாவலை மொழிபெயர்ப்பாக இவ்வாசிரியர் "கசந்த கோப்பி" என்னும் பெயரில் தமிழில் தந்துள்ளார் இலங்கையில் பத்தொன்பதாவது நூற்றாண்டு காலப்பகுதியில் கோப்பி பயிரிடுவதற்காக வந்த ஆங்கிலேய நாட்டுத்துரை ஒருவரின் வாழ்வின் அவல நிலையச் சித்தரிக்கும் இம் மொழிபெயர்ப்பு நூலானது முறையாகத் தமிழில் ஆவணப்படுத்தப்பட்டிருக்கிறது. இதனை ஒரு வரலாற்றுப் பொக்கிஷமாகவே கொள்ளலாம். அத்தகைய இந்நூல் இலங்கை இலக்கியப் பேரவையின் 2010 ஆம் ஆண்டுக்கான சிறந்த மொழிபெயர்ப்பு நூலாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

காவியம் :

## நீலாவணன் காவியங்கள்

கவிஞர் நீலவாணன்




மறைந்த கவிஞர் நீலவாணன் அவர்களின் மூன்று காவியங்கள் இந்நூலில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது. கவிஞரின் மகன் எஸ்.எழில்வேந்தன் இந்நூலை வெளியிட்டுள்ளார். இக்காவியம் நூலில் தென்கிழக்கு (மட்டக்களப்பு) மாவட்டத்தின் சடங்குகள், சம்பிரதாயங்கள், நடப்புகள், நாகரிகங்கள், மனப்பாங்குகள், வரன் முறைகள், பழக்கவழக்கங்கள், அனுஷ்டானங்கள் ஆவனப்படுத்தப்பட்டிருப்பதுடன் 1940ஆம் ஆண்டு தொடக்கம் 1950ஆம் ஆண்டு காலப்பகுதியின் வாழ்வியலையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. இந்நூலுக்கு எங்கள் பேரவையின் 2010ஆம் ஆண்டுக்கான விருது வழங்கப்படுகிறது மகிழ்ச்சிக்குரியதே.

கவிதை :

## சுவட்டெச்சம்

சோ. பத்மநாதன்



காலக்கிடைக்கையின் வெளிப்பாடுகளையும், சமுக வாழ்வியலின் எச்சங்களையும் சுட்டி நிற்கும் இக் கவிதைநூல் ஈழத்து இலக்கிய உலகில் சோ. ப. என்று சுருக்கமாக அழைக்கப்படும் பன்முக ஆற்றல் படைத்த இந் நூலாசிரியரால் எழுதப்பெற்றது. இந்நூலை இலங்கை இலக்கியப் பேரவை 2010ஆம் ஆண்டு வெளிவந்த கவிதை நூல்களில் சிறந்த நூலென தெரிவுசெய்துள்ளது.

பல்துறை :

## இலங்கையில் தொலைக்காட்சி

எம். பகீரதி




தொலைக்காட்சி வருகைக்குப்பின் சமுகத்தில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள், அதனால் ஏற்படுகின்ற பாரிய தாக்கங்கள் பாதிப்புகள் என்பவற்றைக் கூறுவதோடு நின்றுவிடாமல் அதற்கான தீர்வுகளையும் முன் மொழிகின்ற தீர்வுகளையும் இந்நூல் புலப்படுத் துகின்றது. கிழக்குப் பல்கலைக் கழகத்தின் சமுகவியல் துறை விரிவுரையாளரான எம். பகீரதி அவர்களால் எழுதப்பட்ட இந்நூலுக்கு 2010ஆம் ஆண்டில் வெளிவந்த பல்துறை நூலுக்கான பரிசு இலங்கை இலக்கியப் பேரவையால் வழங்கப்படுகிறது.

நாடகம் :

## மனித தர்மம்

கலைஞர் கலைச்செல்வன்



உடைந்து சிதறித் துண்டங்களாகி நிற்கும் வாழ்வியல் கோலங்களையும், நம்பிக்கை எடுத்துரைப்பின் மூலம் வெளிப்படுத்தலாம் என்பதை இந் நாடகநூல் எடுத்தியம்புகின்றது. அரசாங்கச் செயற்பாட்டின் தன்மை எப்படி அமையவேண்டும், அது மக்களைச் சென்றடையும் வழி இந்நாடகங்களின் மூலம் அறியக்கிடக்கிறது. ஆளுமைமிக்க நாடகக் கலைஞனால் எழுதப்பட்டிருக்கும் இந்நூல் இலங்கை இலக்கியப் பேரவையால் 2010 ஆம் ஆண்டுக்கான சிறந்த நாடக நூல் என அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது.

சமயம் :

## திருவருட்பயன் கதைகள்

(குறள், உரை, விளக்கம், கதைகள்)

தமிழறிஞர் கே.வீ.குணசேகரம்




திருவருட்பயனின் நூறு குறள்களுக்கும் உரை, விளக்கம் கூறப்பட்டு பொருத்தமான கதைகளும் காணப்படும் இந்நூலில் சைவசித்தாந்த வடிவங்களும், மனித வாழ்வியலில் மூழ்கிப்போயுள்ள பொறாமை, ஆசை, இன்ப துன்ப நிகழ்வுகள், காதல், போட்டிகள் ஆகியவை வாசிப்புக்கேற்ப சுவைபடக் கூறப்பட்டுள்ளது. மொத்தத்தில் ஆன்மீகத்தை நிறைவாக தெளிவுபடுத்தும் இந்நூலுக்கு 2010ஆம் ஆண்டுக்கான சிறந்த சமய நூலுக்கான எமது பேரவையின் விருது கிடைத்திருப்பது நிறைவாகவே உள்ளது.

அறிவியல் :

## வாதரோகம்

சித்தவைத்தியர் செ. பரமசிவம்பிள்ளை




தமிழ்மொழி மருத்துவக்கல்விக்கு வலுச்சேர்ப்பதாகவும், சித்த வைத்தியத்தின் மூலம் பக்கவிளைவின்றி நோய்களைக் குணப்படுத்த முடியும் என்பதை விளக்கும் இந்நூல் வைத்தியரின் அனுபவ ரீதியான தோற்றப்பாடாக இருப்பதோடு சிறந்த வைத்திய அறிவியல் ஆய்வு நூலாகவும் தென்படுகின்றது. அத்தகைய சிறப்பு நிறைந்த இந்நூலுக்கு முதன்முறையாக அறிவியல்துறைக்காக 2010ஆம் ஆண்டுக்குரிய இலக்கியப் பேரவை விருது வழங்கப்படுகிறது.

## 2010ஆம் ஆண்டிற்கான சான்றிதழ் பெறும் நூல்கள்

| துறை | நூலின் பெயர் | நூலாசிரியர் |
|---|---|---|
| காவியம் | தீரன் திப்பு சுல்தான் காவியம் | ஜின்னா ஹ்ஷரிபுத்தீன் |
| கவிதை | கடந்த போகுதல் | நீ. பி. அருளானந்தம் |
| நாவல் | சாம்பல் பறவைகள் | எஸ். அரசரெத்தினம் |
| சிறுகதை | தாயின்மடி தேடி | கார்த்திகாயினி சுரேஷ் |
| சிறுவர் இலக்கியம் | மழலைப் பாக்கள் | சிதம்பரபத்தினி |
| ஆய்வுநூல் | சூழ ஓடும் நதி | கெகிராவ சஹானா |
| பல்துறை | தொடர்பாடல் ஊடகக்கல்வி | பரராஜசிங்கம் இராஜேஸ்வரன் |
| மொழிபெயர்ப்பு | அந்தப் புதுச் சந்திரிகையின் இரவு | கெகிராவ சுலைகா |
| நாடகம் | மாவீரன் சங்கிலியன் | மு, அருட்பிரகாசம் |

# 2011ஆம் ஆண்டு பரிசுபெறும் நூலும் நூலாசிரியர்கள் அறிமுகமும்

காவியம் :

## வாத்தியார் மாப்பிள்ளை

காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்



கிழக்கு மண்ணின் மருதமுனை என்னும் முஸ்லீம் கிராமத்தை மையமாக வைத்து இங்கு வாழும் மக்களின் வாழ்க்கையை அடித்தளமாகக் கொண்டு எழுதப்பட்டிருக்கும் இக் காவியநூல் மண்வாசனை நிறைந்ததாகக் காணப்படுகிறது. அதற்குக் காரணமாய் அமைவது காவியத்தில் அடிக்கடி இழையோடிவரும் மண்வளச் சொற்களே ஆகும். காவியம் காவியத்துக்கான மரபுவழியை பின்பற்றி எழுதப்பெற்றுள்ளது. இக்காவிய நூலுக்கு எமது பேரவையின் 2011ஆம் ஆண்டுக்கான விருது வழங்கப்படுவது மகிழ்ச்சிக்குரியதே.

கவிதை :

## துயரக் கடல்

கி.பி.நிதுன்




மனிதம் எங்கோ ஒரு மூலைக்குள் துயில் கொள்கிறது மரணம் மட்டும் சுற்றிவரச் செய்கின்றது. உடல்கள் கண்ணீராலும் செந்நீராலும் கழுவப்படுகிறது. அமைதியான மண்ணில் விவசாயமும், பிறவருமானத் தொழில்களும் மண்டிக்கிடந்த மண்ணில் வாழ்ந்த மக்களின் அவலத்தை வெளிப்படுத்தி அவர்களை துயரக் கடலில் சங்கமிக்க வைத்த நிகழ்வை ஒழிவு மறைவின்றி இந்நூல் பிரகடனப்படுத்தி ஆவணமாக்கி அமைதி கொள்கிறது. இந்த நூலுக்கு விருது மட்டும் போதுமா? என்ற ஏக்கத்தோடு எம் இலக்கியப் பேரவை 2011ஆம் ஆண்டுக்கான சிறந்த கவிதை நூலுக்கான பரிசை வழங்கியுள்ளது.

நாவல் :

## சொடுதா

எஸ்.ஏ.உதயன்




நாவல் இலக்கியங்கள் மண்வாசனை, அந்த மண்ணின் இயற்கை வளம், அங்கு வாழும் மனிதர்களின் வாழ்வியல் பற்றியதாகவே எழுதப்படுகின்றது. அந்த வகையில் மீனவ சமுகத்தில் வாழும் இளைஞனின் (சொடுதாவின்) வாழ்வியலை மீட்டுப் பார்ப்பதோடு, பலரக மனிதர்களின் உணர்ச்சியலையும், அதனால் ஏற்படும் விளைவுகளையும் சீரணிக்கும் வகையில் இந்நாவல் நூல் எழுதப்பட்டிருக்கிறது. அத்தனையும் அசல், மறக்கமுடியாதவை. இத்தகைய இந்நூலுக்கு இலங்கை இலக்கியப் பேரவை 2011ஆம் ஆண்டுக்கான சிறந்த நாவலுக்கான விருதினை வழங்கி மகிழ்கின்றது.

சிறுகதை :

## அனுசுயாவின் கரடி பொம்மை

சந்திரகாந்தா முருகானந்தம்




பெண்கள் சமுகத்தில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை மையமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள இச் சிறுகதைத் தொகுப்பு நூலில் பெண்களுக்கு ஏற்படும் சவால்களை எப்படி மேம்பாடடையச் செய்யலாம் என்பதற்கான தீர்வும் கூறப்பட்டிருக்கிறது. கதாபாத்திரப் படைப்புகளில் அவரவரின் குண இயல்புகளை இந்நூல் புடம்போட்டுக் காட்டுகிறது. இந்நூல் எமது இலக்கியப் பேரவையின் 2011ஆம் ஆண்டு வெளிவந்த நூல்களில் சிறந்த நூலாகத் தெரிவாகியுள்ளது.

சிறுவர் இலக்கியம் :

## சந்திரன் கதை

ச. அருளானந்தம் (கேணிப்பித்தன்)



சிறுவர்களுக்கு ஏற்ற வகையில், அவர்களின் சிந்தனையைத் தூண்டும் வகையில் அதிசயிக்கத்தக்க செய்திகளை இந்நூல் கொண்டிருப்பதோடு அன்பு, உண்மை, அழகு எனச் சிறுவர்கள் விரும்பிப் படிக்கக் கூடிய வகையில் ஆக்க வடிவம் கொடுக்கப்பட்டிருக்கும் இந்நூல் எமது இலங்கை இலக்கியப் பேரவையின் 2011ஆம் ஆன்பின் சிறந்த சிறுவர் இலக்கிய நூலாக இனங்காணப்பட்டுள்ளது.

ஆய்வு :

## தென்னிலங்கையின் புராதன இந்துக் கோயில்கள்

என். கே. எஸ். திருச்செல்வம்



தென்னிலங்கையில் இந்துக் கோயில்கள் எவ்வாறு தோன்றின என்பதற்கு வரலாற்று ரீதியாக ஆய்வு செய்யின் பல காரணங்களைக் கண்டறிய முடியும். இன்று இனங்கள் இலங்கையில் பிரிந்திருந்தாலும், சிங்களவர், தமிழர்கள் பொதுவான ஒரு இனக்குழுவில் இருந்து வந்தவர்கள் என்பது வரலாற்று உண்மை. இந்த நூலைப் பார்க்கும்போது இவ்வளவு ஆலயங்கள் தென்னிலங்கையில் இருந்தனவா? என்று எண்ணத் தோன்றும். இந்நூலானது வெளிப்படையாகவே உண்மை நிலையை எடுத்தியம்புகின்றது. சிறப்புவாய்ந்த இவ் ஆய்வு நூலுக்கு பேரவையின் 2011 ஆம் ஆண்டுக்கான ஆய்வு இலக்கியப் பரிசு கிடைக்கின்றது.

சமயம் :

## முன்னோர் சொன்னகதைகள்

யோகேஸ்வரி சிவப்பிரகாசம்



ஆன்மீகத்தின்பால் மக்களை இழுத்துச் செல்லும் நல்ல சிந்தனையை இந்நூலானது தன்னகத்தே கொண்டுள்ளது. பெரியோர்களை மட்டுமல்ல சிறியோர்களும் தெளிந்து சிந்திக்கும் தன்மையுடையதாக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. தென்கச்சி சுவாமிநாதன், சுகிசிவம், யாழ்ப்பாணத்து மணிஐயர் போன்றோர்கள் கதைகூறும் பாணியில் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலுக்கு எமது பேரவையின் 2011ஆம் ஆண்டுக்கான சிறந்த சமய நூலுக்கான விருது கிடைக்கப்பெற்றமை மகிழ்வுக்குரியதே.

நாடகம் :

## குறுங் கூத்துக்கள்

கலையார்வன்





அழிந்து போய்விடுமோ என்ற அச்சத்தில் இருக்கும் கூத்துக் கலையை எட்டிப் பிடித்து வருங்காலச் சமுதாயத்திடம் ஒப்படைத்தே ஆகவேண்டும் என்ற எண்ணங்கொண்டவர்களும் இம்மண்ணில் இருக்கத்தான் செய்கிறார்கள் என்ற ஆதாரத்தைச் சொல்லும் இக் கூத்து நூலாது பெருங்கதைகளை மிகச் சுருக்கமாக மக்கள் முன் எடுத்துச் செல்லலாம் என்பதைக்கூறி நிற்பது பாராட்டுக்குரியதே. இவ்வாறு கூத்துக் கலையை குறுகிய வட்டத்துள் அடக்கி இருக்கும் இந்நூலுக்கு எங்கள் இலக்கியப் பேரவையின் 2011ஆம் ஆண்டுக்கான சிறந்த கூத்து நூலுக்கான விருது கிடைப்பது பொருத்தமானதே.

பல்துறை :

## நேற்றுப் போல இருக்கிறது

கே.எஸ்.பாலச்சந்திரன்




நேற்றுவரை இந்த மண்ணில் எத்தனையோ நடந்தேறிவிட்டன. இதில் நாம் இழந்தவைகள் பல கலைவடிவங்கள், பண்பாட்டுக் கோலங்கள் இவற்றுள் அடங்கியுள்ளன. சிறுவயதுக் காலங்களில் நாம் அனுபவித்தவை, சமுகத்தில் நடந்த மறக்க முடியாத நிகழ்வுகளை எதிர்க்கால சந்ததியிடம் கையளிக்கும் அளப்பரிய கைங்கரியத்தை இந்நூல் பிரதிபலித்துள்ளது. நகைச்சுவை மிகுதியாகக் காணப்படும் இந்நூல் இலங்கை இலக்கியப் பேரவையின் 2011ஆம் ஆண்டுக்கான சிறந்த பல்துறை சார்ந்த நூலாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

அறிவியல் :

## எண்ணங்களும் வண்ணங்களும்

கலாநதி, பண்டிதர் செ.திருநாவுக்கரசு





இந்நூலில் இந்நூல்பற்றி கலாநிதி த.கலாமணி அவர்கள் குறிப்பிட்ட செய்தி பொருத்தமாகவுள்ளது. நாம் பகுத்துக் கூறுபவை மற்றொருவரின் பார்வையில் இன்னொரு துறைக்குரியதாக அமையலாம். இந்நூலானது அறிவியல் துறைக்குள் உள் வாங்கப்பட்டதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்திருக்கலாம் பல வடிவங்களை எண்ணத்தின் வண்னங்களாக வெளிப்படுத்தும் இந்நூலானது இலங்கை இலக்கியப் பேரவையின் 2011ஆம் ஆண்டுக்கான அறிவியல் சார் இலக்கிய நூலாக தெரிவாகியுள்ளது.

மொழிபெயர்ப்பு :

## முல்லைத்தீவு தாத்தா

திக்குவல்லை கமால்



சிட்னி மாகஸ்டயஸ் எழுதிய "Mulaithive seeya" சிங்கள் மொழியில் எழுதிய இந்நூல் "முல்லைத்தீவு தாத்தா" என்ற பெயரில் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. புரையோட்டிப்போன இனங்களுக்கிடையேயான வேற்றுமையை இலக்கியத்தினூடக சமாதானம் ஏற்படுத்தலாம் என்ற முயற்சியின் விளைவே இந்நூலாகும். சிறுவர்களுக்கான வாசிப்பு எழுத்தாக்கப் படைப்பான இந்நூலுக்கு இலங்கை இலக்கியப் பேரவை 2011ஆம் ஆண்டுக்கான மொழிபெயர்ப்பு நூலாக இதனைத் தெரிவு செய்துள்ளது.

## 2011ஆம் ஆண்டிற்கான சான்றிதழ் பெறும் நூல்கள்

| துறை | நூலின் பெயர் | நூலாசிரியர் |
|---|---|---|
| ஆய்வு | எகிப்து முதல் இலங்கை வரை இஸ்லாமியர்களின் இசைஞானம் | கலாஜோதி மௌலவி காத்தான்குடி பௌஸ் |
| காவியம் | தோட்டுப்பாய் மூத்தம்மா | பாலமுனை பாறூக் |
| கவிதை | கறுப்பு மழை | பெரிய ஐங்கரன் |
| நாவல் | அலைக் குமிழ் | அகளங்கன் |
| சிறுகதை | அங்கயற்கன்னியும் அவள் அழகிய உலகமும் | தாட்சாயணி |
| சிறுவர் இலக்கியம் | படைப்புகள் மூலம் அல்லாஹ்வை அறிவோம் | எம்.எஸ்.எம்.நுஸைர் |
| சமயம் | ஸ்ரீமத் பகவத்கீதை சுலோகம் (உரை, விளக்கம், கதைகள்) | தமிழறிஞர் கே.வி.குணசேகரன் |
| மொழிபெயர்ப்பு | இந்த நிலம் எனது | கெகிறாவ ஸீலைஹா |

யாழ். இலக்கிய வட்டம் வழங்கும்
மூதறிஞர், கவிஞர்
அரியாலையூர் வே. ஐயாத்துரை
ஞாபகார்த்த
சிறந்த கவிதை நூலுக்கான விருது - 2011



விருது பெறுபவர்:


**கி. பி. நிதுன்** - முல்லைத்தீவு

அனுசரணை: ஐயாத்துரை குடும்பத்தினர்

கௌரவம் பெறுபவர் :

பழம்பெரும் ஊடகவியலாளர்

**சின்னக்கண்ணு பெருமாள்**
(செய்தி ஆசிரியர், உதயன்)



கௌரவிப்போர் :

இலங்கை இலக்கியப் பேரவை



நூலுக்கான அனுசரணை:

"ஈகன் கிராபிக்ஸ்" நல்லூர் - 021 2223586